DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
O.S.No.185 /2014
****

Deposition of Witness for : DW3

Name : பாலமுருகன்

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : 07.04.2026

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது மேலநீலிதநல்லூாில் குடியிருந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது தந்தை உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்தது சம்மந்தமாக சாட்சியம் அளிக்கம் வேண்டும் என்பதாக அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனது அப்பா பெயர் மாடசாமி. எனது தாத்தா பெயர் அழகையா தேவர். என்னுடைய அப்பாவின் கையெழுத்தை நான் ஏற்கனவே பார்த்துள்ளேன். அதை பார்த்து என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் 2 வது சாட்சி கையொப்பம் என்னுடைய தந்தையின் கையொப்பம் தான். **அது பி.வா.சா.ஆ.17 ஆகும்.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனது அப்பா இறந்து 2 1/2 வருடங்கள் ஆகிறது. உயில் ஆவணம் யாரால் எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி உயில் ஆவணத்தை

எழுதிக்கொடுத்த நபருக்கும், எனது அப்பாவுக்கும் பழக்கம் வழக்கம் இருந்ததா என்பதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உயில் ஆவணத்தை எழுதிக்கொடுத்த நபரை நன்கு தெரிந்து தான் எனது அப்பா கையெழுத்து செய்தார் என்று என்னால் கூற முடியாது. உயில் ஆவணம் உற்பத்தி செய்யும்போதோ, அல்லது நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சம்மன் வரும்வரையிலோ மேற்படி பி.வா.சா.ஆ. 1 உயில் ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது அப்பாவின் கையெழுத்தை காட்டும் வகையில் வேறு ஆவணங்கள் என் கைவசம் கொண்டு வந்தேனா என்றால் இல்லை. எனது தந்தை மாடசாமி என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆதார் அட்டை, மற்றும் குடும்ப அட்டை என்னிடம் உள்ளது(சாட்சி மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் காட்டுகிறார்) எங்கள் ஊரில் மாடசாமி என்ற பெயரில் நிறைய பேர் இருப்பார்களா என்றால் இருக்கிறார்கள். ஊரில் மாடசாமி என்ற பெயரில் அதிக நபர்கள் இருப்பதால் உயில் ஆவணத்தில் கண்ட மாடசாமி என்பவர் எனது தகப்பனார் என்பதை நிரூபிப்பதற்கு எந்த ஆவணமும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றாலும், நான் இந்த பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil